# கற்பகம்



மாசி 1987

விலை ரூபா: 2-50




மாசி - 1987
மலர் - 8
இதழ் - 2

வெளியீடு:
வடமாகாண
தெ.ப.பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்
330, கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22713

ஆசிரியர்
கே. வி. நட்ராஜன்

அட்டைப்படவிளக்கம்
பக்கம் : 22

வடிவமைப்பும்
அச்சீடும்
ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்
125 A ஸ்ரேசன் வீதி
யாழ்ப்பாணம்


# அபிவிருத்தித் திட்டம் 1987

நிபுணர்கள் திட்டங்களைத் தீட்டுவதும் கொள்கைகளை வகுப்பதும் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்காகவே.

வெறும் கடதாசியில் எழுதி வைக்கும் கௌவைக்குதவாத திட்டங்களால் யாருக்கு என்ன பிரயோசனம்? சம்பந்தப்பட்ட தொழிலாளர்களோ மக்களோ நன்மை பெறுவதற்காகவே புதிய அபிவிருத்தித் திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்தப் படுகின்றனவே தவிர ஒரு தனி மனிதன் பலரைச் சுரண்டி வாழ்வதற்காகவும் சுக போகங்களை அநுபவிப்பதற்காகவுமல்ல.

புதிய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து அறிமுகப்படுத்தி அவற்றை நடைமுறைப் படுத்தும் போது சில சிக்கல்கள் பிரச்சினைகள் தோன்றுவது இயல்பானதே.

அதிலும் ஒரு பின்தங்கிய மக்கள் கூட்டம் பல தலைமுறைகளாக கைக்கொண்டு வரும் ஒரு மரபு முறையை மாற்றி புதிய நடைமுறைகளைப் புகுத்தும் போது இது முன்னையதை விட பன்மடங்கு சம்பந்தப்பட்டவர்களுக்கும் சமூகத்துக்கும் நன்மை பயப்பதாயிருப்பினும் கூட, அப்பன் வெட்டிய கிணறு; அது உப்புத் தண்ணீராக இருந்தாலும் கூட அதுவே போதுமென்று அடம்பிடிக்கும் தன்மை அறியாத்தனத்தின் பாற்பட்டதே.

காலமாற்றத்தை, போக்கை உணராத இந்த அப்பாவித் தனத்தைக் கண்டு வெகுண்டெழுவதும் விரக்தியடைவதும் சாதுரியவான்களது செயலாகாது.

இவர்களைப் புதிய அணுகுமுறைக்குப் பக்குவப்படுத்தலாம். எப்படி? இவர்களோடு நன்கு பரிச்சயமானவர்கள் மூலம் உண்மையாகவும் நேர்மையாகவும் வாய்மையாகவும் விஷயங்களை நயம்பட எடுத்துக் கூறி விளங்கப் படுத்தினுல் நிச்சயம் இவர்கள் பரிபூரண ஒத்துழைப்பு வழங்கப் பின்நிற்கப்போவதில்லை.

ஆனுல் அவர்களோடு நன்கு பரிச்சயமானவர்களால் விபரீதமான முறையில் தங்

கள் சுயநலம் கருதி ஒரு துளி விஷக் கருத்தேனும் திட்டமிட்டுப் புகட்டப்படுமேயானால் அதனைவிடப் பேரபாயம் வேறொன்றும் இருக்க முடியாது.

இப் பின்னணியில் வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசத்தால் 1987-ல் இருந்து தனது அங்கத்துவ சங்கங்களால் நடைமுறைப்படுத்துவதற்காக சங்கங்களின் ப்ரதிநிதிகளை உள்ளடக்கிய விதத்தில் திட்டமிடல் குழுவை அமைத்து அவர்களின் பூரண அங்கீகாரத்துடனும் கூட்டுறவுப் புனருத்தாரணக் குழுவின் அநுசரணையுடனும் பல புதிய அபிவிருத்தித் தி' டக் கருத்துக்களை முன்வைத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு செயல்முறையிலும் இறங்கியது

மிகக் கவனமாக உண்மையாக நேர்மையாக வாய்மையாக தூய்மையாக உள்ளொன்று வைத்துப் புறமொன்று நினைக்காத வகையில் வெகு நிதானமாக வகுக்கப்பட்டது அபிவிருத்தித்திட்டம்,

பல சங்கங்கள் பூரண திருப்தியுடன் செயலிலும் இறங்கியுள்ளன

ஆனாலும் திட்டமிடல் குழுவில் அங்கம் வகித்தவர்களிற் சிலர்நடிப்புச் சுதேசிகளாக இருந்து திட்டம் நடைமுறைக்கு வந்தபோது தமது சுயரூபத்தைக் காட்டி தமது சுயநலத்தைக் கருத்தில் கொண்டு செயற்பட்டு அங்கத்தவர் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முற்பட்டமை மிகவும் வேதனைக்குரியதும், விசனிக்கத்தக்கதுமாகும்.

அங்கத்துவ நண்பர்களே, இவர்களை நீங்கள் இனங் கண்டுகொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

இவர்கள் எல்லாம் தெரிந்த மாதிரியும், எல்லோரையும் அறிந்த மாதிரியும் சமதர்மக் கொள்கையே தமது இறுதி மூச்சென்றும் உங்கள் நலமே தங்கள் நலமென்றும் கூறுவார்கள். ஆனால் வாய் வீச்சில் வல்லவராய்த் தான் இருப்பர்.

இப்படி ஒரு நிலைமை 1972 ஆம் ஆண்டு தெ.ப.பொ.கூ. சங்கங்கள் இங்கு தாபிக்கப்பட்ட போதும் இந்தக் கும்பல் ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதையாக பெரிதாக ஒப்பாரி வைத்ததும் சகலரும் அறிந்ததே:

திட்டம் அப்பழுக்கற்றது. சகல இடங்களிலுமுள்ள அங்கத்தவர்களும் சமனான இலாபத்தைப் பெறுவதற்குரிய முறையில் ஒரே சீராக் கப்பட்டுள்ளது. முன்பு இடத்துக்கிடம் காலத்துக்குக் காலம் வெவ்வேறு

27ம் பக்கம் பார்க்க



# முகாமையாளர்களும் முகாமைத் திறனும்

தி. திருலிங்கநாதன்

- செலவைச் சுருக்கிப் பலனைப் பெருக்க வேண்டும்.
- முகாமை தவறினால் விளைவுகள் விபரீதமாகி விடும்.
- திறன்கள் கூர்மையாக்கப்படல் அவசியம்

உற்பத்திக்கு வளங்கள் அவசியம். நிதி, ஆள்வலு / திறன், யந்திரவலு, மூலப்பொருட்கள், தொழில்நுட்பம் ஆகியனவே இவ் வளங்கள். எந்நாட்டிலும் வளங்கள் அருகியே கிடைக்கும். எனவே, உற்பத்தியைப் பெருக்க வளங்கள் வீண்போவதைத் தடுக்க வேண்டும். அவற்றை ஆற்றல் திறன் கொண்டு கையாள வேண்டும். இவற்றை நிறைவேற்றி உற்பத்தியில் விளைவின் மேன்மையைப் பெருக்க உதவுவதே முகாமையாகும்.

செலவைச் சுருக்கியும் பயனைப் பெருக்கியும் எமதுபிரதேசத் தொழில்களை விருத்தி செய்ய முகாமைத்திறன் படைத்தவர்களை நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

தொழில் வளர்ச்சியைத் தடை செய்யும் அரசியல் முரண்பாடுகள், ஆட்டங்காணும் பொருளாதாரம், சமுதாயத்தைப் பிணிக்கும் சிக்கல்கள் சறுக்கல்கள் இவை போன்ற தடைகளைக் களைய நெகிழ்ச்சியும் முன்யோசனையும் தீர்க்கதரிசனமுமுடைய முகாமையாளர்கள் தேவை. முன் கூறிய தடைகளால் பல தாக்கங்கள் ஏற்படலாம். இத்தாக்கங்களால் மதிப்பீட்டுக்கு மிஞ்சிய செலவும் (Cost over run) வேளைக்கு வேண்

இக் கட்டுரையாளர் இலங்கையின் சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியாக விளங்கி நாட்டின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கும் காரணகர்த்தாவாக இருந்து ஓய்வு பெற்றவர். சிறந்த திட்டமிடல் நிபுணருமாவார். பல அமைச்சுக்களின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு ஆலோசகராக விளங்கினர்.

டிய விளைவுகள் ஏற்படாமற் போதலும் (Time over runs) ஏற்பட்டு எத்தனையோ உற்பத்தி முயற்சிகள் உறங்கிவிட்டன.

முகாமையின் தொழிற்பாடுகளாம் திட்டமிடல், நிறுவுதல், வழிகாட்டல், ஆள்வலு சேர்த்தல், கண்காணித்தல், கட்டுப்படுத்தல் ஆகியவை முகாமையின் முக்கிய இலட்சணைகளாகும்.

வழிவழி அதிகாரம் வழங்கல் (Delegation) முகாமையின் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதே சமயம் அவ்வெல்லைகளை மேற்பார்வையிடல் அதனினும் தனித்துவம் வாய்ந்ததாகும்.

முகாமை திறம்பாமலும் விளைவுகள் விபரீதமாகவும் முடியாமல் தடுக்க சிலசில அணுகுமுறைகளையும் அணுகு திறன்களையும் கையாள வேண்டியது அவசியமாகின்றது.

ஏன், எப்படி என்ற கேள்விகளின் அடிப்படையில் எமம் ஆய்வு (Means ends Analysis). குறிக்கோள் (Goal). நோக்கு (Purpose). விளைவு (Output) உள்ளீடு (Input) என்பவற்றை உள்ளடக்கி தர்க்கரீதியான வார்ப்புப் படமமைக்கல் (Logical frame work) இவை அணுகு முறைகளிற் சில. இலக்குகள், அளவுகாட்டிகள் இதில் இடம் பெறுவதால் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தலும் செவ்வனே இயங்கமுடியும்.

உற்பத்தியைப் பெருக்கவும் நிதியைச் சிக்கனமாகச் செலவிடவும் மூலப்பொருட்களை ஆற்றற்றிறனுடன் பாவிக்கவும் பல அணுகு திறன்கள் உள்ளன. இவற்றை உற்பத்தி முகாமையாளர் தெரிந்து வைத்திருத்தல் அவசியம்.

புள்ளியியல் அடிப்படையிலான அணுகு திறன்கள் முதலியன தொழிற்துறை முகாமையில் கையாளப்பட வேண்டியனவாகும். இவை உற்பத்திப் பொருளின் தரவு, தரம், காலம், நிதியோட்டம், மூலப்பொருட்களின் உன்னத உபயோகம் முதலிய முக்கிய அம்சங்கள் பற்றி முகாமைக்கு உறுதுணையாய் அமைவன.

திட்டமிடும் ஆற்றலில்லாத முகாமையாளர் கொண்ட தொழில் நிறுவனம் பலசிக்கல்கட்கும். சறுக்கல்கட்கும் இடையே இயங்க வேண்டிய துரதிர்ஷ்டம் ஏற்படலாம்.

காலத்தை விரயஞ் செய்யும் முகாமை கட்டாயம் நிறுவனத்தைப் படுகுழி நோக்கி இழுத்துச் செல்லும். "Delay is the Deadliest form of Denial".

தொடர்பு கொள்ளலில் தெளிவு, செறிவு, ஆணித்தரம் அவசியமாகும்.

தொழிற்றுறையை பல்வேறு பகுதிகளாகப் பிரித்து உகந்த முகாமைத் திறன்களைக் கையாள்வது உற்பத்தியைப் பெருக்கி நிதியைச் சிக்கனப்படுத்தி மூலப்பொருட்களை உன்னதமாக உபயோகிக்க உறுதுணை செய்யும்.

வெவ்வேறு வகையான உற்பத்திகள், வெவ்வேறு வகையான நுட்பவியல், வெவ்வேறு வகை

(5 ம் பக்கம் பார்க்க)



# நேரமறிந்து பணிசெய்தல் பெண்களின் கடமை

சிலர் வெளியில் எங்காயினும் சென்று விட்டு வீடு திரும்பும் போது கோபத்துடனும், வெறுப்புடனும், ஆத்திரத்துடனும் திரும்புவதுண்டு. இதற்குப் பல காரணங்களிருக்கலாம்.

சென்றவிடங்களிலோ அல்லது வரும் வழியிலோ ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். இதனால் வீட்டிலும் சில வேளைகளில் இவ்விதமாகக் காணப்படுவர். இந்நேரங்களில் மற்றவர்கள் எதைக் கதைத்தாலும் அவர்களைச் சினப்பர்.

அகத்தினழகு முகத்திற் தெரியும் என்பார்கள். அது போல அவர்கள் வீட்டிற்கு வரும்போது அவர்களின் முகத் தோற்றத்தைக் கொண்டே நிகழ்வைச் சிறிதாயினும் ஊகித்தறிந்து அவர்களை வரவேற்க மனைவியரும், தாய்மாரும் தெரிந்திருக்க வேண்டும்.

அவர்களின் மன நிலையறியாது அவர்களுடன் நல்லதையே கதைக்கப் பேசினாலும் கூட வீண் தர்க்கமே ஏற்படும். முடிபு அடிதடி, கொலை, தற்கொலை போன்ற விபரீதங்களைக் கூட ஏற்படுத்தலாம்!

ஆகவே கணவரோ பிள்ளைகளோ இவ்வாறாக வீடு திரும்பும் வேளை "இங்காவது மன நிம்மதி கிடைக்கும்" என எதிர்பார்த்துத் தான் வருகிறார்கள். அவர்களை இலவு காத்த கிளியாக்காதிருப்பது இல்லத்தரசிகளின் பணியேயாகும்.

அவர்கள் வீட்டிற்கு வந்ததும், அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தல் வேண்டும். அவ்வேளையிற் சிலர் தமது மனதை வாட்டும் சில விடயங்களைக் கூறுவர். அப்போது சிந்தித்து அப் பிரச்சினையைத் தீர்க்கத் தாமறிந்த உபாயங்களைக் கூறலாம்.

ஆனால் வேறு சிலர் தமக்கு நேர்ந்த கதியைக் கூறத் தயங்குவர். இவ்வாறானவர்களிடம் அவர்களுக்கு விருப்பமான செயல்களைச் செய்து விடுக் கேட்கலாம். ஆனால் கேட்கும் விதம் அவர்களுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணக் கூடிய விதமாயிருக்கக் கூடாது.

அவர்கள் கூறிடினும், கூறுவிடினும் அவர்களினது மன நிலை அறிந்து, வேண்டிய பணி செய்ய பெண்கள் அனுபவ ரீதியாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

(நன்றி: சிந்தாமணி)

முகாமை...

(4 ம் பக்கத் தொடர்ச்சி) .....

யான வாடிக்கையாளர்கள், சந்தைகள், இவற்றை நம்பியிருக்கும் பலவேறு தொழில்கள் கையாளும் முகாமைத் திறன்களிலும், உத்திகளிலும் பொதுமை இருப்பினும் தத்தமக்கே புறம்பான திறன்கள் கூர்மையாக்கப்படல் அவசியமாகும்.

# சத்தியம் நேர்மைகட்கு சாவுமணி அடித்ததடா!

வேலணை நித்தி

சத்தியம், நேர்மைகட்கு
சாவுமணி அடித்ததடா!
புத்தி கெட்ட மனிதரினால்
பூமியெங்கும் அழியுதடா!

எத்தனை உயிர் இழந்தோம்
எத்தனை பலம் இழந்தோம்
இத்தனை இழப்புகட்கும்
ஈடு இணை ஏதுமுண்டோ?

பத்து மாதம் சுமந்த அன்னை
பாரினிலே பரிதவிக்க,

சத்திய வேட்கையினால்
சாய்ந்த மைந்தர் எத்தனைபேர்?
விடுதலை வேட்கையினால்
வீழ்ந்த மைந்தர் எத்தனைபேர்?

நித்திரையாய் இருந்தாலும்
நித்தமும் இழப்புகளே
தத்தி வரும் குழந்தைகூட
எத்தர் முன் எதிரியாச்சே.

உடைமைகளை இழந்து நின்றோம்
உரிமையையும் இழந்து விட்டோம்,
உணர்வுதனை இழக்கும் முன்னே
உறக்கத்தைக் கலைத்திடுவோம்.

சத்தியம் நேர்மைகட்கு
சாவுமணி அடித்ததடா
சட்டத்தின் கரங்களிங்கே
வெற்றிச் சங்கீதம் முழக்குதடா,



# தாத்தாவும் பேரனும்

கே. சம்பந்தம்
கொமன்வெல்த் பனைவள நிபுணர்

**தாத்தா:-** 'கோப்பி', 'ரீ' முதலியவை எல்லாம் மனிதனின் மூளைக்கு மட்டுமே கிளர்ச்சி ஊட்டுகின்றன. உடலுக்குப் பல கெடுதல்களைச் செய்கின்றன. பதநீரைப் பருகி வந்தால் உடலும் உள்ளமும் சிறக்கும்.

**பேரன்:-** பதநீரில் என்னென்ன சத்துப் பொருள்கள் உள்ளன என்று கூறுங்கள் தாத்தா, தெரிந்து கொள்கிறேன்.

**தாத்தா:-** பதநீரை ஆராய்ந்த மருத்துவத்துறைப் பேரறிஞர்கள் பதநீரின் பயன்களைப் பற்றி விளக்கியிருக்கிறார்கள்;

- பதநீரிலுள்ள சுண்ணும்புச்சத்து பற்களை உறுதிப்படுத்தி ஈறுகளில் இரத்தக் கசிவு ஏற்படுவதைத் தடுக்கும். பற்களின் பழுப்பு நிறத்தை மாற்றி வெண்மையாக்கும்.
- மெலிந்து நெஞ்செலும்பு தள்ளிய குழந்தைகளுக்கு நல்ல பாதுகாப்பு உணவாகும்.
- பதநீரிலுள்ள சீனிச்சத்து உடலுக்கு வெப்பத்தைத் தருகிறது.
- மெலிந்து தேய்ந்து வாடிய வடிவுடைய குழந்தைகளின் உடலைப் பதநீரிலுள்ள குளுக்கோஸ் சீராக்குகிறது. கணைச்சூட்டை நீக்குகிறது.
- கருவுற்ற மகளிரும், பிள்ளைப் பேறு பெற்ற தாயும் பதநீர் பருகி உடல் நலம் பெறலாம்.
- இரத்த அழுத்தத்தைத் தடுக்கிறது.
- ரைபோய்ட் சுரம், (நிமோனியா) குளிர்ச்சுரம் முதலிய நோய்களுக்குப் பதநீர் நல்லதொரு நிவாரணி.
- பதநீர் இருதயத்தை வலுவடையச் செய்யும். இருதய நோயை நீக்கும்.
- பதநீரிலுள்ள இரும்புச்சத்து பித்தத்தை நீக்குகிறது. சொறி, சிரங்கு, தடிமன், காசநோய், முதலியவற்றைக் குணப்படுத்தும்;

**பேரன்:-** தாத்தா! பதநீர் பசிக்கு விருந்தாகவும், நோய்க்கு மருந்தாகவும் அன்றோ இருக்கிறது.

**தாத்தா:-** உண்மைதான். இன்னொரு முக்கியமான விஷயம். பொதுவாக எமது உணவில் உயிர்ச்சத்து 'பி' என்னும் சத்துப் போதுமான அளவு இருக்க வேண்டும். இல்லையானால் பல விதமான கண் நோய்கள் ஏற்படும். பதநீர் சாப்பிட்டு வந்தால் அந்தச் சத்துப் போதுமான அளவிற்குக் கிடைக்கும்.

**பேரன்:-** அப்படியானால் கண் நோய்க்கும் இந்தப் பதநீர் அருமையான மருந்து என்கிறீர்கள் இல்லையா?

**தாத்தா:-** மதுரையில் கண் மருத்துவ வல்லுனர் திரு. ஜி. வெங்கடசாமி பதநீரைக் கொடுத்துக் கண்நோயைத் தீர்த்து வந்தார். இதனை அகில இந்திய குருடு தடுப்பு மகாநாட்டில் இந்தியாவில் உள்ள டாக்டர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

**பேரன்:-** நானும் இனிமேல் நிச்சயம் பதநீர் கிடைக்கும் போதெல்லாம் சாப்பிடுவேன் தாத்தா.

---

## விரோதி

ஒரே ஓர் அங்குல நீளமுள்ள சின்னஞ் சிறு பூரான் குஞ்சு ஒன்றை ஒரு சேவல் கண்டது. உடனே இறகுகளைச் சிலிர்த்துக் கொண்டு தன் முழு பலத்தையும் பிரயோகித்துப் பூரான் குஞ்சை நோக்கிப் பாய்ந்து. அதை அப்படியே கொத்தி விழுங்கிவிட்டது.

பக்கத்திலிருந்த ஒரு வாத்து சேவலின் வீராவேசத்தையும் பாய்ச்சலையும் பார்த்து "இது என்ன பயங்கரமான ஒரு யுத்தமா? பூரான் குஞ்சைக் கொத்தி விழுங்க இவ்வளவு வீராவேசம் தேவையா? உன் ஆவேசமும் முழுப்பலமும் மலைகளையே பெயர்த்து விடும் போலிருக்கிறதே!" என்று கேலியாகச் சொன்னது.

"வேறு என்ன செய்வது? விரோதி எவ்வளவு அற்பமானவனாக இருந்தாலும் அவனை விரோதியாகத் தானே பாவிக்க வேண்டும்?" என்று கூறியது சேவல். (பெங், சீனு)





## பனையிலிருந்து பெற்றோல்; வடக்கில் 'அரபு' வளம்!

'கற்பக'னுக்கு இப்போது ஏகப்பட்ட 'குஷி; "என்ன கற்பகனாரே நீர் சரியான ஆள்தான் ஐயா, என்ன தீர்க்கதரிசனம்! . . . என்ன தீர்க்கதரிசனம்!!" என்று எல்லாம் பாராட்டுக்கள் வந்து குவிந்த வண்ணம் உள்ளதே இக்குஷிக்குக் காரணம்.

கடந்த இதழில் இப்பத்தியில் பனையோலை ஏடுகள் இருக்கும் வரை எமக்குக் காகிதப் பஞ்சம் ஏது என்று குறிப்பிட்டு இது 'பனையுகம்' என்றும் பெருமிதப்பட்டு இருந்தது வாசகர்களுக்கும் தெரியும். இன்று பனை இருக்கப் பெற்றோல் தட்டுப்பாடு ஏன் என்று கேள்வி எழும்பியுள்ளது இது 'கற்பக'னை ஆகாசத்துக்கு தூக்கி விடாதா என்ன? இந்தச் செய்தி உங்களுக்கும் மகிழ்ச்சியைத் தராமல் இருக்க முடியாது.

"......பனையிலிருந்து பெற்றோல்! என்ன இது பெற்றோல் எரி பொருள்களுக்குக் குடாநாட்டில் தடை விதிக்கப்பட்ட இந்நேரத்தில் இப்படி ஒரு இனிப்பான செய்தியா என்று திகைக்காதீர்கள்!

எங்கள் பிரதேசம் எங்கும் உள்ள பனைகள் தரும் கள்ளிலிருந்து தரமான மதுசாரம் தயாரிக்கலாம். அந்த மதுசாரத்தைப் பெற்றோலுக்குப் பதிலாக வாகனங்களுக்குப் பாவித்து அவற்றை இயக்கலாம். இத்தனை காலமாக ஏன் இதைச் செய்யாமல் இருந்தோம் என்று கவலைப்படுகிறீர்கள் என்பது புலனாகிறது ....."

இப்படி எல்லாம் அங்கலாய்த்துள்ளது "சஞ்சீவி" வாரசஞ்சிகை விஞ்ஞானரீதியாகப் பனையைப் பயன்படுத்தி மாற்று எரி

பொருள்களை உற்பத்தி செய்ய முடியும் என்ற உண்மை கால நூ. கடந்தாவது இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கதும் மகிழ்ச்சி அளிப்பதுமாகும்.

தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் இவ் உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளதுடன் பயனுள்ள முடிவுகளையும் தந்துள்ளன. யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் அவர்களே தனது ஆராய்ச்சிகளின் பயனாகப் பனம் மதுசாரத்தைப் பெற்றோலிற்குப் பதிலாக உபயோகிக்க முடியும் என்றும் நிரூபித்துள்ளார்.

பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இதுசம்பந்தமாக எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையில் இருந்து ஒரு பகுதியைக் 'கற்பகம்' வாசகர்களுக்குச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

"ஏமது பிரதேசத்தில் மட்டும் ஒருகோடி பனைமரங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஐம்பது வீதமானவை பெண்பனைகளாகும். ஒவ்வொரு பனையும் சராசரியாக 25 பழங்களை ஒருவருடத்திற்குத் தருமாயின் ஒரு வருடத்தில் 25,000 மெற்றிக் தொன் பனம் பழப்பாகை நாம் பெறலாம்.

பனம்பாகில் சீனிச் செறிவு 15 வீதமாகும் இதிலிருந்து ஆகக் குறைந்தது 5 வீத மதுசாரம் பெறலாம்.

மூன்று மனிதர்கள் ஒரு மணி நேரத்தில் செய்யும் வேலையைப் பத்து நிமிடத்தில் செய்யக் கூடிய மின்சாரத்தால் இயங்கும் பிழி சாதனம் ஒன்றை யாழ். பல்கலைக்கழக உயிரியல் தொழில் நுட்பப் பிரிவு உருவாக்கி உள்ளது. இதனால் பனம் பாகு பிழியும் செலவு நூறுமடங்கால் குறைக்கப்படுவது மட்டுமல்லாமல் பெறப்படும் பாகு சுகாதாரமானதாகவும், நோய்விளைவிக்கக் கூடிய அங்கிகளோ அல்லது வேறு உயிரங்கிகளோ குறைந்ததாகவும் இருக்கும்.

இத்தன்மை பனம் பழப்பாகு பழுதடையாமல் இருக்கும் காலத்தைக் கூட்டவல்லது. இப்பனம் பாகிலுள்ள சுக்குரோசைப் பெருமளவில் மதுசாரமாக மாற்றும் மாதிரிச் செய்முறைகள் நடாத்தப்பட்டுள்ளன.

"இலங்கையில் பெற்றோலியப் பொருட்கள் காணப்படுவது' இல்லை. நாம் 1981 ல் எமது அந்நிய செலாவணியில் 57 வீதத்தைப்



பெற்றோலியப் பொருள்களின் இறக்குமதிக்காகச் செலவழித்துள்ளோம். பனம் மதுசாரத்தைப் பெற்றோலிற்குப் பதிலாக உபயோகிப்பதே இதற்கு மாற்றாகும்."

பேராசிரியருக்குக் கற்பகனின் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும், அவர் இப்பிரதேசத்தின் பொருளாதாரத்திற்கு சிறந்த வழிகாட்டியுள்ளார். இம்முயற்சி செயலில் பயன்தரத் தொடங்கினால் அரபு நாட்டு எண்ணெய்வளம் போன்று வடபகுதியும் எண்ணெய் வளம் மிக்கதாக மாறிவிடும். இங்கிருந்து அரபு நாடுகளுக்கு வேலை தேடி ஓடுவோர் அங்கிருந்து இங்கே திரும்பி ஓடிவரும் காலம் வந்துவிட்டது. வெளி நாட்டவரும் வேலைதேடி வடக்கே நாடி வரும் காலமும் வராமல் போகுமா?

## ஏனோ இன்னும் வெளிநாட்டு மோகம்.......!

காதோடு காதாக இன்னுமொரு சேதி! எம்மவர்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரம் கெட்ட 'குடி' வகைகளில் காட்டிவரும் மோகம் உடலையும் கெடுத்துப் பணத்தையும் அழிக்கும் ஒரு 'தற்கொலை' முயற்சியாகும். பனம் சாராயம் போன்ற 'குடி'வகைகள் உடலுக்கு நன்மை பயப்பனவாகவும் நோய்களுக்கு மருந்தாகவும் விளங்குகின்றன.

உள்ளூரில் உற்பத்தியாகும் இத்தரமான 'குடி' பானங்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாகக் 'கற்பக'னுக்குத் தகவல் எட்டியுள்ளது. எமது 'மது' பானங்கள் விரைவில் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய நிலை உருவாகியுள்ளது பெருங்'குடி' மக்களுக்கு மகிழ்ச்சியளிக்குமா?

வெளிநாட்டு மதுமோகத்தைக் கைவிடாத மதுப்பிரியர்கள் அனுபவிக்கத் தவறிய 'சுகானுபவ'த்தை எமது உள்ளூர் 'மது' பானங்களில் வெளிநாட்டவர்கள் அனுபவித்துத் திளைக்கப் போகின்றார்கள். இதன் மூலம் எமது தொழிலாளர்களும் செல்வந்தர்களாகப் போவதும் நிச்சயம்.

இதனை எழுதுகையில் 'கற்பக'னுக்கு ஆனந்தத்தால் புளகாங்கிதம் அடையாமல் இருக்க முடியுமா? ஏனென்றால் இப்போது எல்லாம் 'கற்பக'னுக்கு ஒரே படுகுஷிதான் போங்கள்! உங்களுக்கும் இருக்காதா என்ன?

## அக்கரையிலிருந்து.....

'கற்பகன்' ஈழத்துப் புதினங்களை இந்தியா, மற்றும் வெளிநாட்டு வானொலி ஒலிபரப்புக்களில் கேட்டாலே ஆறுதல் அடைவது வழக்கம்.

அன்றும் வழக்கம் போல் வானொலி அலைவரிசைகளை மீட்டும் போது திருச்சி அலைவரிசையில் என் காதில் விழுந்து 'தேனு'க ஒலித்தது

''பனை மரமே! ஒளி விளக்காய்

ஊரைக் காத்து நிற்கிறதே''......

என்ற அப்பாடல், கடல் கடந்து அதுவும் இந்திய வானொலியில் எமது பனைவளம் பற்றிய பாடல் ஒலித்தது எமக்கெல்லாம் பெருமை தராதா? கடந்த 14.2.87 ம்திகதி காலை 8.45 மணிக்குக் கோஷ்டி கானமாகப் பனைமரம் பற்றிய பாடல் சிறந்த இசையமைப்பில் வீணு கானமாக ஒலித்தது.

''பனைமரமே! பனைமரமே!! பலவகையில்

எங்களுக்கு பயன்படுவாய் பனைமரமே.....

என்று அப்பாடல் பனையை 'வரம்' கேட்பதாக அமைந்துள்ளது. என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

திருச்சி வானொலியைப் பின்பற்றிப் பனைவளம் மிகுந்த எமது பிரதேசத்தில் வானொலி, தொலைக்காட்சிச் சேவைகளும், பனைவளம் பற்றிய பாடல்களைத் தினமும் ஒலிபரப்பக்கூடாதா? இசைக்கச்சேரிகளிலும் கூடப் பனைப் பாடல்களைப் பாடலாம்.

## ஸ்தாபகனும் வெற்றி வீரனும்

ஒரு காலத்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். இருவரும் மாணவர்கள். மூத்தவன் எந்நேரமும் புத்தகமும் கையுமாக இருப்பான். பாடப்புத்தகங்களை மட்டுமின்றிப் பொது அறிவை ஊட்டும் பிறநூல்களையும் வாசித்துக் கொண்டிருப்பான்.

இளையவனுக்கு விளையாட்டில்தான் பிரியம். ஆடிஓடிக் கும்மாளம் போடுவது அவன் வழக்கம்.

ஒருநாள் மூத்தவன் ஒரு பெரிய சரித்திரப்புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். அப்போது இளையவன் பக்கத்தில் கீழே உட்கார்ந்து அட்டைகளை வைத்து ஒரு வீடு கட்டிக் கொண்டிருந்தான். பலமாக மூச்சு விட்டாலும் அட்டை வீடு சரிந்துவிடும் என்று மிகவும் ஜாக்கிரதையாக அவன் அதைக் கட்டினான்.

மூத்தவன் தன் எதிரில் அமர்ந்திருக்கும் தந்தையைப் பார்த்து அப்பா இந்தப்புத்தகத்தில் சில

(14-ம் பக்கம் பார்க்க)



## ஈழத்தில் இருந்து தமிழகம் வரை ...

## 12

தமிழகத்தில் 'குமரி' மண் பல்வேறு வகைகளிலும் சிறப்புப் பெற்றது என்பதை எனது விஜயத்தின் போது நேரில் தெரிந்து கொண்டேன். புனித பூமியெனப் போற்றப்படும் இங்கு புண்ணிய விருட்சமாகிய பனைவளம் மட்டுமன்று புண்ணிய ஸ்தலங்களும், வரலாற்று நிகழ்வுகளும் பெருமை சேர்க்கின்றன.

இங்கு என்னை வெகுவாகக் கவர்ந்து கொண்டது 'தானுமால் அயன்' கோவில். இக்கோவிலில் சுமார் 25 அடி உயரமான ஆஞ்சனேயர் திருவுருவ விக்கிரகத்திற்குப் பூஜை நடைபெறுகின்றது.

இவ் ஆலயத்தில் உள்ள மிக முக்கிய விசேஷம் அதன் தூண்கள். கோவில் தூண்கள் நாதம் எழுப்பும் 'அதிசய'த்தைக் கண்டு வியந்தேன். ஒவ்வொரு தூணைத்தட்டும் போதும் வெவ்வேறு நாதம் ஒலித்தது. ஆலயத்தில் பக்தி பரவசத்தில் திளைத்த என்னை இத்தூண்களின் நாத இசை கிறங்க வைத்தது.

தமிழகக் கட்டிடக் கலையின் சிறப்பையும், சிற்பத் திறமையையும் அங்கு காணமுடிந்தது பத்மநாபபுரம் என்னுமிடத்திலுள்ள புராதன அரண்மனையொன்றைப் பார்வையிடும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. இது உண்மையிலேயே எனக்கு பயனுள்ளதாக அமைந்தது. புத்தகங்களிலும், சினிமாப்படங்களிலுமே மன்னர்களின் அரண்மனைகளைப் பார்த்தும் அறிந்தும் வைத்திருந்தோம். மிகவும் பழமை வாய்ந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பத்மநாபபுரம் அரண்மனையை நேரில் பார்த்த போது வியப்பு அடைந்தேன். அந்த அரண்மனையில் அரசனின் அந்தப்புரம், அந்தரங்க குளிக்கும் குளம் ஆகியன அமைந்துள்ள விதத்தைப் பார்க்கும் போது அக்காலத்தில் தேவ லோகம் போல் காட்சியளித்திருக்கும் என்று எண்ணத்தோன்றுகின்றது. பத்மநாபபுரம் மகாராஜா கொடுத்து வைத்தவர்தான்.

க. நடராசா
தலைவர், பனை அபிவிருத்திச் சபை

இந்த அரண்மனையில் முக்கியமாக என்னைக் கவர்ந்தது ஆயுதக் கிடங்கு தான். ஆயுதக் கிடங்கு மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. அக்காலத்து ஆயுதங்களைப் பார்வைக்கு வைத்திருந்தார்கள். ஆயுதங்களுக்கு வைரமான பனைமரங்களில் செதுக்கப்பட்ட பிடிகள் போடப் பட்டிருப்பதைக் கண்டு வியப்புற்றேன். முக்கியமாக ஈட்டிகளுக்குப் பனைமரப் பிடிகள போடப்பட்டிருந்தன. அக்காலத்தில் போர்களின் போது

பாவிக்கப்பட்டு வந்த பிரதான ஆயுதம் "ஈட்டி" என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆயுதங்கள் அங்கு வந்திருந்த உல்லாசப் பயணிகளின் 'வியப்'பைப் பெற்றுக் கொண்டன.

அக்காலத்தில் இராசத்துரோகத்திற்குத்தண்டனையாகக் 'கழுவேற்'றப்பட்டதாகத் தெரிவித்தனர். 'கழுமரம்' என்னை வெகுவாகப்பயமுறுத்தியது. அக்கழுமரம் அரண்மனையின் ஒரு பகுதியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. சில கோவில்களில் கோழியைப் பலியிடும் போது சூலத்தில் 'குத்தி' பலியிடுவது போல் மரணதண்டனை பெறுபவரை கழுமரத்தில் கோழியைக் குத்துவது போல் குத்தித் தண்டனை நிறைவேற்றப்பட்டதாம். (தொடரும்)

## ஸ்தாபகனும் வெற்றி வீரனும்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரர்களை வெற்றி வீரர்கள் என்றும், வேறுசில வீரர்களை சாம்ராஜ்ய ஸ்தாபகர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஏன் அப்படி? வெற்றி வீரனுக்கும், சாம்ராஜ்ய ஸ்தாபகனுக்கும் என்ன வித்தியாசம்? என்று கேட்டான்.

அப்பா பதில் சொல்வதற்காக யோசனை செய்து கொண்டிருந்த போது இளையவன் வெகுநேரம் சிரமப்பட்டுக் கட்டிய வீட்டுக்கு மாடியும் வைத்துக் கட்டிவிட்டதற்●காகச் சந்தோஷத்தினால் கைதட்டி 'மாடியும் கட்டிவிட்டேன்,' என்று ஆரவாரம் செய்தான்.

அவன் ஆரவாரத்தைக் கேட்டுக் கோபம் கொண்ட மூத்தவன் எழுந்து சென்று, தம்பி சிரமப்பட்டுக் கட்டிய அட்டை வீட்டை ஒரே உதையில் சிதைத்து நாசமாக்கி விட்டான்.

அப்போது தந்தை அவன் கேள்விக்குப் பின் வருமாறு பதில் கூறினார்:-

"மகனே! உன் தம்பி ஸ்தாபகன் நீ வெற்றி வீரன்."— (புளோரியன், பிரான்ஸ்,).

### ஆத்திரமோ அவசரமோ?

ஒருத்தி:- என்னடி இராசியின்ரை புருஷன் வலு ஆத்திரத்தோடை மோட்டைச், சயிக்கிளை உதைக்கிறார். ஏதும்அவசரமோ?

மற்றவள்:- மனிசிக்கு உதைக்க மாட்டார் அவளின்ரை கோவத்தை எல்லாம் வைச்சு மோட்டைச் சயிக்கிளுக்கு உதைகிறார்.

### மருத்துவர்

ஒருத்தர்:-டாக்டர் என்ன வருத்தம் எண்டு சொல்ருர்?

மற்றவர்:- நோய் பிடிபடவில்லை போலை கிடக்கு. அது தான் எல்லா சாதிக் குளிசயிலையும் அள்ளித் தந்திருக்கிறார். ஏதாவது ஒண்டுக்கு நிக்குமெண்டு அவருக்குத் தெரியும்.

ஒருத்தர்;- ??????...



# தியாகத்தில் எரியும் தீச்சுடர்

செல்வி அ. அறிவரசி

சுவர் மணிக்கூடு ஏழு முறை அடித்தோய்ந்தது. திடுக்கிட்டு கண் விழித்த முரளி அவசர அவசரமாக ஆபீஸ் செல்வதற்குத் தயாராகினன். தங்கை வதனா கொடுத்த சாப்பாட்டுப் பார்சலைப் பெற்றுக் கொண்டு வேகமாக நடந்தான். மாலையானதும் ஆபீஸ் முடிந்து வீடு திரும்பிய முரளி உடைகளைக் களைந்து விட்டு அலுப்புடன் கட்டிலில் சாய்ந்தான். அவனது கடந்த கால வாழ்வு நினைவில் ஓடியது.

அப்போது அவனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தான்.




அன்றொரு நாள் அவனது தந்தை ராமநாதன் விபத்து ஒன்றில் சிக்கி இறக்கும் தறுவாயில் இருந்தார். அப்போது முரளியை அழைத்து "தம்பி இனி நான் உயிருடன் இருக்க மாட்டேன். நீதான் உன் தங்கையையும் அம்மாவையும் கண்கலங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எனது செல்ல மகளான உன் தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்துவை. இவற்றை எனக்காகச் செய்வாயா மகனே" என்று கண்ணீருடன் கேட்டார். அதற்கு அவன் "அப்பா கவலைப்படாதீர்கள் நான் அம்மாவையும் வதனாவையும் காப்பாற்றுவேன்" என்று உறுதியுடன் கூறினன். அவனது உறுதியையும் நெஞ்சுரத்தையும் நேரில் கண்ட தந்தை சந்தோஷமடைந்தார். சிறிது நேரத்தின் பின் கண்ணைமூடிக் கொண்டார். ராமநாதன் பொறுப்பை விட்டுச் சென்றாரே ஒழிய ஓட்டைவிழுந்த இரண்டு ரூபாத்தாளைக் கூட விட்டுச் செல்லவில்லை. முரளிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எப்படியோ அன்றாடம் கூலி வேலை செய்து தங்கையையும் தாயையும் காப்பாற்றிய தோடல்லாமல் மேலும் தொடர்ந்து படித்து இப்போது ஒரு ஆபீசில் ஆயிரம் ரூபா சம்பளம் வாங்குபவனாகக் கடமையாற்றுகிறான்.

கலியாணப் புறோக்கரின் சத்தத்தைக் கேட்ட முரளி தன் சுய நினைவிற்குத் திரும்பினன். கலியா

ணப் புரேக்கர் அவனைத் தனிமையிலழைத்து "தம்பி எனக்கு உன் நிலையைப்பற்றி நன்றாகத் தெரியும் அதனாலேயே உனக்கு உதவி செய்யும் நோக்குடனேயே இங்கு வந்தேன்" என்றார். அதனைக் கேட்ட முரளி "ஐயா என் தங்கையின் நல்வாழ்விற்காக என் தலையைக் கூடக் கொடுக்கத் தயாராகியுள்ளேன்" என்று உணர்ச்சி பொங்கக் கூறினான். அதைக் கேட்ட புரேக்கர் சிரித்துக் கொண்டே "தலையைக் கொடுக்க வேணாம் கழுத்தை நீட்டுறவனுக்குத் தாலி கட்டிவிடு" என்றார். இதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற முரளி "என் தங்கையின் வாழ்விற்குப் பின் தான் என் வாழ்வு" என்றான். "அதற்குதம்பி அதனாலேயே சொல்கிறேன் எனக்குப் பொய் பேசிப் பழக்கம் கிடையாது. நீ துரைசிங்கத்தின் ஒரே மகள் உமாவைத் திருமணம் செய். ஆனால் அப்பெண் ஓர் பைத்தியம்" என்றார். பின்னர் அவளைச் செய்தாயானால் நீ சீதனம் வாங்கி உன் தங்கையின் திருமணத்தைச் செய்யலாம்" என்றார். பைத்தியம் என்ற சொல்லைக் கேட்டு அதிர்ந்தானாயினும் சமாளித்துக் கொண்டு தங்கையின் நல் வாழ்விற்காக விட்டுக்கொடுத்தான்.

மறுநாளே அங்கே பெண் பார்க்கச் சென்றான் அவர்களைக் கண்ட அல்ஷேசியன் நாய் குரைக்கத் தொடங்கியது. நாயை விரட்டிய பின் உள்ளே வரும்படி அழைத்தார் துரைசிங்கம். அவர்கள் சென்று அமர்ந்ததும் துரைசிங்கம் பேச்சை ஆரம்பித்தார். "தம்பி என்னுடைய மகள் பைத்தியம் என்று அறிந்தும். தங்கைக்காக உனது வாழ்வை தியாகம் செய்ததை எண்ணிப் பெருமிதமடைகிறேன். மேலும் உமா எனக்கு ஒரே மகள். ஆதலால் சுமார் 2 இலட்சம் பெறுமதியான உடமைகளை சீதனமாக அவளுக்கு அளிக்கிறேன்" என்றார். இரண்டு இலட்சம் என்று அறிந்ததுமே அவனுடைய காதுகள் குளிர்ந்தன. மேலும் அவர் வதனாவுக்கு நல்லதொரு மாப்பிள்ளையைப் பார்க்கும்படியும் தானே அத் திருமணத்தை நிறைவேற்றி வைப்பதாயும் கூறினார். சந்தோஷத்தோடு தலையை ஆட்டினான் முரளி. அப்போது சைக்கிள் பெல் அடித்துச் சத்தம் கேட்கவே துரைசிங்கம் அங்கு விரைந்தார். புரேக்கரும் அவர் பின்னாலேயே சென்றார். ஹோலில் தனிமையிலிருந்த முரளியுடன் உமா பேச்சுக் கொடுத்தாள். "முரளி நான் பைத்தியம் அல்ல" என்றாள். அவன் சரியெனத் தலையை ஆட்டினான். எந்தப் பெண்ணாவது தான் பைத்தியம் என்றதை ஒப்புக் கொர்ண்டதுண்டா? "முரளி நீங்கள் உங்கள் தங்கையின் வாழ்விற்காக உங்களை தியாகம் செய்தீர்களே அதனாலேயே உண்மையைச் சொல்கிறேன். அப்பா எனக்குப் பிடிக்காத மாப்பிள்ளையைக்



கட்டிவைக்கப்பார்த்தார். அதனாலேயே நான் பைத்தியம் போலே நடித்தேன்" என்றாள். அவளைப் பரிதாபத்தோடு பார்த்தான் முரளி. அப்போது துரைசிங்கம் வரவே உமா உள்ளே சென்றாள். முரளியும் புரேக்கரும் விடைபெற்றுக் கொண்டு சென்றனர். அவன் மனம் சந்தோஷத்தினால் துள்ளியது.

தங்கைக்கு திருமணம் பேசி முற்றாக்கி விட்டு அழைப்பிதழ்களுடன் அங்கே சென்றான். முரளி அழைப்பிதழை துரைசிங்கத்திடம் நீட்டினான். அதற்கு அவர் "இதோ பார் எனது மகளுடைய அழைப்பிதழை" என்றார். அதற்கு அவன் "ஐயா நீங்க என்ன சொல்லுறீங்க" என்றான். அதற்கு அவர் ஒரு வில்லன் சிரிப்பை உதிர்த்து விட்டு "என்னுடைய மகள் பைத்தியமில்லை என்பதனை அறிந்து விட்டேன் அன்று அவள் பேசியதை நான் கேட்டுக் கொண்டுதானிருந்தேன்" என்றார். அழைப்பிதழை அவர்நீட்ட கைகள் நடுங்க அதைவாங்கினான் முரளி. அதில் எனது மகள் உமாவிற்கும் சங்கருக்கும் திருமணம் நடாத்த நிச்சயித்துள்ளோம் எனக் குறிப்பிட்டிருந்தது. அவனுக்கு தலையே சுற்றுவது போலிருந்தது. "ஐயா இது அநியாயம்" என்று கதறினான்; கை கூப்பிக் கெஞ்சினான். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த உமாவோ "அப்பா இது அநியாயம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள். இதற்கு நான் ஒரு போதும் சம்மதிக்கமாட்டேன்" என்று கதறினாள். அவரது மனமோ இளகவில்லை. பரிதாபமாக நின்றிருந்த முரளியை "கெட் அவுட்" என்று துரத்தினார். அதிர்ச்சி கொண்ட முரளியோ வீட்டை விட்டு வெளியேறினான். அவன் மனம் அழுதது. கடவுளே இனி நான் என்ன செய்வேன் தங்கையின் வாழ்வு என்னவாகும் என்று கண்ணீர்விட்டுக் கதறினான்.

அப்போது அவசரமான சிகிச்சை ஒன்றுக்காக டாக்டர் சங்கர் காரிலே வந்துகொண்டிருக்கிறார். ஆம் அந்த டாக்டர் சங்கர்தான் உமாவினது மாப்பிள்ளை. தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்த முரளிமீது கார் மோதி விடுகிறது. இதனால் முரளிக்குக் காயம் ஏற்பட்டு இரத்தம் ஒழுகியது. இதனைக் கண்ணுற்ற மக்கள் சங்கரை ஏசத்தொடங்கினர். முரளியோ தன்னிலேதான் பிழை என உணர்ந்து அமைதியாக எழுந்து 'வழியை விடுங்கள் அவர் செல்லட்டும்' என்றான். அதனைப்பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் சங்கர் இரக்கமீதியினால் முரளியைத்தூக்கி காரிலே போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தான். அங்கு அவனே முரளிக்குச் சிகிச்சை அளித்து முரளியினது துயரக்கதையை ஒருவாறு அறிந்து கொண்டான். ஒருமுடிவுடன் துரைசிங்கத்தின் வீட்டுக்குச் செல்கிறான் சங்கர். சங்கர் முந்தி கெட்டவனாயிருந்தது உண்மைதான் ஆனால்

முரளியைச் சந்தித்த பிறகு அவன் ஒரு நல்லவனானான். அங்கே துரைசிங்கத்திடம் விளக்கமாக நடந்ததைக் கூறி "உமது மகளை நான் ஏற்கமாட்டேன் அது உமாவுக்கும் விருப்பமில்லை" என்றான்' துரைசிங்கமும் நடந்தவைகளை முழுமையாக அறிந்து சங்கரிடம் மன்னிப்புக் கேட்டு சங்கரின் விருப்பப்படி நடப்பதாயும் கூறினார். சந்தோஷத்தோடு விடைபெற்ற சங்கர் நடந்தவைகளை ஒன்றும் விடாமல் முரளிக்குக் கூறினான் அவனோ விரக்தியுடன் சிரித்து விட்டு "எனது வாழ்வு சரி என்அருமைத் தங்கையின் மாப்பிள்ளை வேறு திருமணம் முடித்து விட்டானே" எனக் கூறினான். அதற்கு சங்கர் அவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு "கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையலாமோ" என்றான். முரளிக்கோ ஒன்றுமே புரியவில்லை மீண்டும் சங்கர் "இதோ பார் முரளி உனது தங்கைக்கு வாழ்வு தர நான் இல்லையா" என்றான். "உனக்கு விருப்பம் என்றால் சொல்லு உன் தங்கையை நானே ஏற்கிறேன். அவளைக் கண்கலங்காமல் பார்த்துக் கொள்வேன்" என்றான், சந்தோஷமடைந்த முரளியோ தனது மைத்துனனான சங்கரைக் கட்டித்தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிகிறான்.

## கழுதையின் வீரம்

காட்டில் உள்ள அத்தனை மிருகங்களையும் நடுநடுங்க வைத்துக் கொண்டிருந்தது ஒரு சிங்கம். அதற்கு வயதாகித் தள்ளாமை வந்து விட்டது. நடக்கவும் சக்தியில்லாமல் அது படுத்துக்கிடந்த போது அதற்குப் பயந்து கொண்டிருந்த மிருகங்கள் எல்லாம் வந்து அதைத் தாக்க ஆரம்பித்து விட்டன.

ஒரு குதிரை வந்தது. சிங்கத்தை ஓர் உதை உதைத்து விட்டுப் போனது. ஒரு மாடு வந்தது, ஒரு முட்டு முட்டி விட்டுப் போனது.

சிங்கத்துக்கு ஒரே ஆத்திரம். ஆனால் எதுவும் செய்வதற்குச் சக்தியில்லாமல் உள்ளுக்குள் குமுறிக் கொண்டு கிடந்தது. கடைசியில் ஒரு கழுதை வந்தது. அதுவும் சிங்கத்தைக் காலால் உதைத்தது.

ஆத்திரமும் மனவேதனையும் தாங்காமல், "கழுதையே! நான் சாவதைப்பற்றிக் கவலைப்படவில்லை, ஆனால் இருந்திருந்து உன்னிடமும் உதை வாங்குகிறேனே. இது எனக்கு இரட்டைச் சாவாக இருக்கிறது" என்று சொன்னது சிங்கம்,

(லாபோந்தேன், பிரான்ஸ்)



# வறுமையில் பிறந்த இனியகுரல்!

எல்விஸ் பிரெஸ்லி அதிசயமானவர். பொப்மியூசிக் உலகில் 'கிங் ஆஃப் சூப்பர்' என்று வர்ணிக்கப் பட்டவர்.

"இன்றுவரை அமெரிக்காவுக்கு எத்தனையோ ஜனாதிபதிகள் இருந்திருக்கிறார்கள், ஆனால் ஓரே ஒரு எல்விஸ் பிரெஸ்லி தான் இருக்க முடியும்" – அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரின் பாராட்டுரை இது.

இளம் வயதிலேயே புகழின் உச்சத்துக்கு சென்று பொப் இசைப் பிரியர்களின் மனங்களில் நீங்காத இடம் தேடிக் கொண்டு விட்ட எல்விஸின் மறைவு பலரது கண்களை நீரில் மூழ்க வைத்தது.

1935 – ல் எல்விஸ் பிறந்தார். பதினெட்டு வயதில் எல்விஸ் டிரக் டிரைவராக வேலைக்குச் சேர்ந்தார். சரித்திரத்தின் பிறப்பிடமே வறுமைதான் போலிருக்கிறது! தந்தை விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார். குடும்பம் நடத்த முடியவில்லை: தாய் வெளியே போய் வேலை செய்யத் தொடங்கினார். பொருளாதாரத்தில் பிரமாத முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

எல்விஸுக்கு இனிமையான குரல் இயற்கையாகவே இருந்தது. பாடுவதற்கு முயற்சி செய்தார். பிரவாகமாக வந்தது. டீன் ஏஜ் பருவத்திலேயே இவருடைய முதல் இசைத்தட்டு வெளி வந்தது. நான்கு டாலர்கள் கொடுத்து அந்த ரெக்கோர்ட்டை வாங்கித் தன் தாயின் பிறந்த நாளுக்குப் பரிசாகத் தந்தார் எல்விஸ்.

அதற்குப் பின் அவருடைய வளர்ச்சி இசை உலகையே ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

"அவருடைய ஒரு குத்து (Punch) என்னைக் கீழே தள்ளி விட்டது" என்று பிரபல குத்துச் சண்டை வீரர் முகமதுஅலி ஒரு முறை அவரது திறமை பற்றி வர்ணிக்கையில் எடுத்துக் கூறியிருக்கின்றார் என்பதையும் நாம் நினைவு கொள்ளலாம்.

அமெரிக்க இசை உலகில் ஒரு புதிய 'சரித்திரத்தை' 1955 – ல் தொடக்கி வைத்த இளைஞர் எல்விஸ் இன்று இல்லை. ஆனால் வறுமையை மாற்றி கோடீஸ்வரராக்கிய அவரது குரல் இன்றும் கேட்டுக் கொண்டு தானிருக்கிறது.

க: கணேசலிங்கம்

---

## மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் புத்தகம்!

தங்களை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டிய புத்தகம் எது?

கலைஞர் கருணாநிதியிடம் சமீபத்தில் கேட்கப்பட்ட கேள்வி இது.

இதற்கு அவர் அளித்த பதில் இதுதான்:

"அது ஒரு எழுதப்படாத புத்தகம்! அதன் பெயர் அனுபவம்!"

— தருபவர்: கணேஷ்

# பெருங்கடல் நண்டின் தனித் தன்மைகள்

கடற்பிராணிகளில் கொடூரமான குணங்கொண்டது பெருங்கடல் நண்டு. இதனை 'லோப்ஸ்டர்' என்று அழைப்பர் இந்த நண்டின் உடலைச்சுற்றிக் கவசம் போன்று ஓடு அமைந்துள்ளது. இந்த நண்டு ஏனைய நண்டினங்களோடு சேர்வதில்லை· என்றும் தனித்தே வாழும் குணமுடையதாகும்.

பெருங்கடல் நண்டின் சராசரி நிறை 40 பவுண்டுகள் வரையில் இருக்கும். இந்த நண்டினத்தின் சராசரியான ஆயுட்காலம் (50 ஆண்டுகள்)அதாவது அரை நூற்றாண்டு காலமாகும். பெண் நண்டுகள் சுமாராகப் பதினைந்தாயிரம் முட்டைகளை இடுகின்றன· நண்டுக் குஞ்சுகள் மேலோடுகளினால் பாதுகாக்கப்படாமையினால் மிகச்சொற்ப அளவிலான குஞ்சுகளே தப்பிப்பிழைக்கின்றன.

நீண்ட ஆயுட்காலமுடைய கடற்பிராணிகளில் ஒன்றாகப் பெருங்கடல் நண்டினம் விளங்கிய போதிலும் இனப்பெருக்க அளவு மட்டுப்படுத்தப் பட்டதாகவே உள்ளது. நண்டுக் குஞ்சுகளின் உடலைப் பேணும் ஓட்டுக் கவசம் இன்மையால் இன்று கடற்பரப்பில் கலந்து வரும் குரூட்ஓயில் எனப்படும் பெற்றோல் முதலான இரசாயனங்களினால் பெருங்கடல் நண்டினம் அழிவுறும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கப் பெருங்கடல் நண்டுகள் தமது கால்களைக் கொண்டே சுவாசிக்கின்றன. தமது உணர்வுக்கொம்புகளால் சுவையை அறிகின்றன. இவற்றின் உடலினுள் காணப்படும் குருதி நீலநிறமாகும்.

தொகுப்பு:
அ. நவஜீவன்

## உறக்க நோய்

'சி...சி' என்பது நாம் எமது வெறுப்பை காண்பிக்க ஏற்படுத்தும் ஒலி ஓசை. 'சிசி' என்பது ஆபிரிக்காவின் உகண்டாவில் மரணப் பீதியை ஏற்படுத்தும் நோயை உண்டாக்கவல்ல ஈக்களைக் குறிப்பதாகும்.

உகண்டா நாட்டில் 'உறக்க நோய்' என்ற மரணப்பீதிக்குரிய நோயை 'சிசி' என்னும் ஈக்கள் இனம் ஏற்படுத்தியுள்ளது. உகண்டாவில் 'சிசி' ஈக்களின் தாக்கம் அதிகமாகவுள்ளது. 1940 லும் இப்பகுதியில் 'உறக்க நோய்' எண்ணற்ற மனித உயிரை வாரிக்கொண்டு சென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த 'உறக்கநோய்'' African Typanosomiasis என்றழைக்கப்படும். இந்நோய் பீடித்தால் முதலில் காய்ச்சலடிக்கும். பின் நிணநீர்முடிச்சுக்கள் வீங்கி நெறிகட்டி வேதனை தருவதோடு மெல்லமெல்ல மனித உயிரைப் பலி கொள்ளும்.

1984 ன் இறுதியில் இந்த நோய்க்கு உட்பட்டவர் தொகை 1,922 பேராகவும் 1985 ல் 8,431 பேராகவும் அதிகரித்துள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தொகுப்பு: அ. செந்தூரன்



# இமயம்

**K. சாந்தி**

கி...ரீ...ச். கிரீ...ச் வெண்மண் பரவிய முற்றத்திலே கஜன் சைக்கிள் ஓட்டும் சத்தம் அது. அவன் என்ன செய்கிறான் எனக் கண்காணிக்கவென மெல்ல எட்டிப் பார்த்த யமுனாவை அவன் கண்டு விட்டான். கன்னங்களில் குழி விழ அவன் சிரிக்கிறான். அந்த மின்வெளிச்சத்தில் அவன் மேனி மினுங்குகிறது. பதிலுக்கு புன்னகை சிந்திய யமுனா ஹோலினுள் நுழைந்து எதிரே போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தபடி அண்ணாந்து பார்த்தாள். பொக்கை வாயில் புன்னகை தவழ வீற்றிருக்கும் தர்மலிங்கம் மாஸ்டரின் நிழற்படம் தெரிகிறது.

அவருடைய பரந்த நெற்றி. அதில் விபூதிக் குறியிட்டது போல காணப்பட்ட தோல் சுருக்கங்களும் இந்த உலகை அவர் நெளிவு சுளிவு இன்றி பரந்து நோக்கும் உள்ளத்தை உணர்த்தியது. பரந்த அறிவாளி எனப் பறைசாற்றும் அவர் முகத்தை கூர்ந்து கவனித்தாள் யமுனா. இத்தனைக்கும் அவர் யார்? சமூகம் போற்றிடும் சாதாரண ஆசிரியர் அவர் செய்திட்ட சேவைகளால் இமயமென உயர்ந்து உள்ளார்..

தலைமை ஆசிரியர் தர்மலிங்கம் என்றால் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் தொடங்கி பாடசாலையின் கடைசி மாணவன் வரை தெரியாதவர் இல்லை. தனது தன்னலம் அற்ற சேவையாலும், நேர்மையான இரக்க சுபாவத்தாலும் எல்லோர் உள்ளத்தையும் கவர்ந்திட்டவர். அவரைப் பொறுத்தவரை யாதும் ஊரே யாவரும் கேளிர்தான்.

ஒரு சமயம் தர்மலிங்கத்தின் தங்கை அவரிடம் வந்து தனது மகன் படித்துவிட்டு வேலையின்றி அலைவதைக் கண்டு "அண்ணை இவன் தம்பி ரகு படிச்சு என்ன பலன். இப்ப றோட்டு றோட்டாச் சுத்திறான. இவரோடை தோட்டத்துக்கு போடாவெண்டால் போகானாம், தான் உத்தியோகம் தான் பாக்க வேணுமாம். இல்லாட்டால காசு மாறி தரட்டாம் வெளியாலை போக எண்டுஅழுங்கு பிடி பிடிக்கிறான. நான் இதுக்கு என்ன செய்யிறது நீ ஒரு முடிவை சொல்லன்,'' எனக் கேட்டாள். தருமர் இயற்கையில் இளகிய மனது கொண்டவர். ''தஙகச்சி இந்தககாலததுப் பெடியள் படிசசா உத்தியோகம் தான் பாக்க வேணும் என்று நினைக்குதுகள். மண்வெட்டி

பிடிக்க வெட்கம், அநாகரிகம் எண்டு நினைக்குதுகள். ரகு நினைக்கிறது தப்பில்லை. அவன் நினைக்கிற மாதிரி வெளியாலை அனுப்பினால்என்ன?எனஇழுத்தார்.‘‘ஓம் அண்ணை சும்மா ஊரைச் சுத்திறவன் வெளியிலே போனால் எங்கடை கஷ்டம் நீங்கும். ராஜிக்கும் நல்ல இடத்திலே கலியாணம் கட்டிக் குடுக்கலாம். தம்பி வெளியாலே வந்த கையோடை யமுனாவுக்கு அவனைக் கட்டிக்கொடுக்கலாம். ஆனால் இதுக்கு ஆரின்ரை காலிலை விழப் போறன், என்னட்டை காசு இல்லை’’ என ஆசை காட்டி அண்ணனிடம் இரங்கினாள்.

---

## அட்டைப்பட விளக்கம்

# நாமும் நாரும்

பனையின் பல்வேறு பயன்களும் வெளிநாட்டு ‘இறக்குமதி’களுடன் போட்டிபோட்டு வருகின்றன. இப்போட்டிபற்றிக் ‘கற்பகம்’ அடிக்கடி குறிப்பிட்டும் வருகின்றது. இப்போது பிளாஸ்ரிக் வயர்களுடன் பனை நாரும் போட்டி போடத் தயாராகி விட்டது.

முன்னரெல்லாம் எமது கதிரைகள், தட்டிகள் போன்றவற்றிற்குப் பிளாஸ்ரிக் வயர்களையே பின்னி வந்தனர். ஆனால் இவற்றினால் இயற்கையான பாதுகாப்பையும், குளிர்மையையும், சுகாரோக்கியத்தையும் அளிக்க முடியவில்லை.

பனை நார் இயற்கையிலேயே வலிமையும், வளமும் கொண்டதாகவும், மருத்துவ ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதாகவும் விளங்குகின்றது. பனை நாரினால் பின்னப்பட்ட ஆசனங்கள், கதிரைகளுக்குத் தமிழகத்தில் அதிக ‘‘மவுசு’’. அது மட்டுமல்ல பனைநார் தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றது அங்கு பனைநார்ப் பொருட்களை உற்பத்தி செய்வதில் புதிய தொழில் நுட்பங்களும், புதிய வடிவமைப்பு முறைகளும் புகுததப்பட்டு வருகின்றன.

அழகிய பனைநார்க் கூடைகள், பெட்டிகள், கொள்கலன்கள் கவர்ச்சியான முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ் நாட்டில் இளம் பெண்ணொருவர் பனைநாரில் கூடைகளை உற்பத்திசெய்து வைத்திருப்பதையும், ஆசனம் ஒன்றைப் பனைநாரில் பின்னிக் கொண்டிருப்பதையுமே அட்டைப்படத்தில் காணுகிறீர்கள்.

தற்பொழுது வடபகுதியிலும் பனைநார் உற்பத்தி ஊக்கம் பெற்று வருகின்றது. பனை அபிவிருத்திச் சபையில் பனைநார் உற்பத்தித்துறையில் இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒருவர் போதனாசிரியராகக் கடமையாற்றி வருவதாகவும் பனை நாரினாலான உற்பத்திகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பனைநார் உற்பத்திப் பயிற்சிகளைக் கிராமிய மட்டத்தில் அளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நாமும் பனைநாரையே பயன்படுத்துவோம்!



ஒன்றுக்கொண்டு உதவியாக இருக்கும் என கூறிய தங்கையின் ஆசை வார்த்தைக்கு கட்டுப்பட்ட தருமர் ‘‘நாளைக்கு வாவன் நான் பார்த்து மாறித்தாறன்’’ எனக் கூறி அனுப்பினார்.

தருமர் தனது திட்டப்படி மனைவியிடம் அவளின் மாங்கல்யத்தைத் தருமாறு கேட்டார். ‘‘ஒருக்காலும் நடக்காது. உதவி உதவி என்று எல்லாரும் வர வர என்ரை நகை நட்டு எல்லாத்தையும் கழட்டி தந்தன். பிள்ளையின்ரை பேரிலே கிடந்த ஒரே ஒரு காணியையும் வித்துப் போட்டியள். இதாலை நீங்கள் உதவி செய்த யாராவது உங்களுக்கு ஏதாவது செய்தவங்களே? எங்களுக்கும் பெண்பிள்ளை அல்லே இருக்கு. வயசு வேறை ஏறுது இப்ப இருக்கிற சொத்து இது ஒண்டு தான். அதுவும் நீங்கள் கட்டின தாலி. இதையே கேக்கிறியள்’’ என்று எட்டு வீடு கேட்க ஒப்பாரி வைத்தாள். தருமரும் விட்டபாடில்லை. மனைவியும் கொடுத்தபாடில்லை. தருமர் இறுதியாக கூறினார். ‘‘இந்தா பார்; அவனை வெளியிலே அனுப்பினால் வந்ததும் யமுனாவை கட்டுவானப்பா’’ என்றார். அவள் அகல விழிகளை விழித்து ‘‘உண்மையே’’, என்றவாறு கழுத்தில் இருந்த மாங்கல்யத்தை கழற்றி தருமர் கையில் கொடுக்கிறாள். அப்போது அவர்கள் இருவரின் கண்களின் முன்னும் யமுனாவின் கழுத்தில் ரகு தாலி கட்டியது போன்ற பிரமை.

ரகுவுக்கே யமுனாவென முடிவாக்கி தருமர் தம்பதிகள் காத்திருந்தனர். காலம் கடக்க கடக்க இவர்களின் கற்பனைகளும் பெருகின. ஆனால் யமுனாவின் உள்ளத்தில் இது எதுவித சலனத்தையும் ஏற்படுத்தவே இல்லை. அவள் முள்ளந்தண்டற்ற ரகு போன்ற சுயநலவாதிகளை வெறுக்கும் ஒரு புறநடை மாது.

நாட்கள் வாரங்களாக வாரங்கள் மாதங்களாக மூன்று வருடம் உருண்டு ஓடி விட்டது, தருமரைப் பொறுத்தவரை ரகுவையும் மகளையும் பற்றிய கற்பனைக் கோட்டை சற்று உயர்ந்தே எழுந்திருந்தது,

அன்று சனிக்கிழமை. மறுநாள் விடிந்துவிட்டால் கொழும்பில் தங்கியிருக்கும் ரகு வந்துவிடுவான். அவன் வரவை எதிர்பார்த்து தர்மலிங்கம் மாஸ்டரின் வீடுவிழாக்கோலம் பூண்டிருந்தது. ஆனால் இந்த ஆடம்பரங்கள் அலங்காரங்கள் எதுவுமே யமுனாவிற்கு பிடிக்கவே இல்லை. மொத்தத்தில் ரகுவின் வரவு கூட அவளுக்குக் கசப்பாகவே பட்டாது. அந்த அளவிற்கு அவள் அவனை வெறுப்பது வேறு ஆடவனை நேசிக்கிறாளோ என எவரையும் ஐயுற வைக்கும். அவள் அன்று ஏதோ பாலைவனத்தில் நடப்பது போலத் துடியாய் துடித்தாள். அவன் வரவை எதிர்பார்த்து அல்ல; எதிர் கொள்ள மறுத்து.

ரகு வரப்போகும் ஆரவாரத்தில் திளைத்திருந்த தருமலிங்கம்

மாஸ்டரினதும், மனைவியினதும் கனவைக் கலைத்து கொண்டு வாசலிலே ஸ்கூட்டர் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து அழகான கம்பீரமான இளைஞன் ஒருவன் தனக்கென உரிய கம்பீர நடையுடன் இறங்கி வந்தான். அவனின் கனிவான கவர்ச்சியான பார்வை ஹோலில் இருந்த தருமலிங்கம் மாஸ்டரை விட யமுனாவையே விழுங்கி விடும் போல இருந்தது. அவனை அடையாளம் கண்டு கொள்ள தருமருக்குநேரம் பிடித்ததோ என்னவோ ஆனால் யமுனா கண்டு விட்டாள். அவன் வேறு யாருமல்ல. அவளைவிட இரண்டு வருடம் முன்பு பயின்ற தருமரின் கல்லூரி மாணவனான ஜெகன். அவன் தன்னை அறிமுகம் செய்தான். ஆனால் அவன் பார்வை முழுவதும் யமுனாவையே சுற்றிச்சுற்றி வந்தன. யமுனாவின் மனம் 10 வருடங்கட்கு பின் நோக்கி தள்ளப்பட்டது.

ஜெகன் எட்டாம் வகுப்பு மாணவன் அவன் முதல் நாள் பாடசாலைக்கு வரவில்லை என தருமு மாஸ்டர் அடித்து விட்டார். அது அவன் கையில் தழும்பை உருவாக்கி விட்டது அன்று மாலை அவன் தனது தாயுடன் வந்தான். யமுனாதான் வரவேற்றாள். ஏற்கனவே ஜெகனின் நடையுடையை கொண்டு அவன் ஏழை என அனுதாபம் கொண்டிருந்தாள். ஆனால் அவனது தாயின் குழிவிழுந்த கண்கள், இளைத்து விட்ட உடல், அதை மூடிய, தையலிடவே இடமற்ற ஆடையைப் பார்த்ததும் அனுதாபம் பன்மடங்காகியது. உட்காரச்சொல்லி விட்டு தந்தையிடம் சென்றாள்.

தருமு மாஸ்டர் விசாரித்த போது அவன் மிகவும் கஷ்டப்பட்டவன் என்றும். நேற்று அவனிடமிருந்த ஒரே ஒரு சீருடை துவைத்து உலரவிட்ட போது திடீரென வந்த மழையால் நனைந்து விட்டது. எனவே வரவில்லை என்பதைக் கேட்ட மாஸ்டர் அழுதே விட்டார். அன்று தொடக்கம் A/L வரை படிப்பு தொடர தானே உதவினார். கெட்டிக்காரனான ஜெகன் புலமைப் பரிசில் பெற்று பல்கலைக் கழக படிப்பைத் தொடர்ந்தான். பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியவனுக்கு இப்போது கம்பனி யொன்றில் அக்கவுண்டன் வேலை கிடைத்ததைக் கூற வந்திருந்தான்.

தருமலிங்கம் மாஸ்டரிடம் உதவி பெற்று முன்னுக்கு வந்தவர்கள் அனேகம். ஆனால் நன்றி நவில்பவரோ சிலரே. அவர்களில் ஒருவன்தான் ஜெகன். அவன் தருமலிங்கம் மாஸ்டருடன் உரையாடினாலும் கவனம் பூராவும்யமுனா மீதே இருந்தது. அவளைத் தான் விரும்பினாலும் அவள் கருத்தை அறியச் சந்தர்ப்பம் கிடைக்குமென நினைத்து விடை பெற்றான்.

தருமரினதும், மனைவியினதும் கவனம் மருமகன் வரவில் இருந்தது. யமுனா ரகுவையும் சற்று முன்வந்த ஜெகனையும் ஒப்பிட்டுக்



கொண்டிருந்தாள். ஜெகனது அடக்கமான எளிமையான சுபாவம் அவளை நன்கு கவர்ந்தது. நேரம் கடந்தது. ரகு வந்தான். தனியாக அல்ல; திருமதி ......ரகுவும் பின் தொடர, தருமரால் தாங்க முடியவில்லை. அதுவே அவரை மாரடைப்பு நோய்க்குப் பலியாக்கியது.

தருமலிங்கம் மாஸ்டரின் ஈமக்கிரியைகள் யாவும் முடிவடைந்தன. பெற்ற பிள்ளை போல ஜெகன் நின்று நடாத்தினான். ரகுவின் குடும்பத்தாரின் தலைக் கறுப்பை அங்கு காணமுடியவில்லை. ஜெகனே தான் யமுனாவை கவர்ந்து விட்டதை அவளது நடத்தையின் மூலம் கண்டு கொண்டான். ஆனால் தருமரின் மனைவியால் கனவுலக மருமகனின் ஏமாற்றத்தை தாங்கவே முடியவில்லை. மாங்கல்யத்தை விற்பதாகக் கூறி அவன் அதைப் பறித்தே விட்டான் எனப் புலம்பினாள்.

சிறிது காலம் சென்றது. ஜெகனால் யமுனாவையோ யமுனாவால் ஜெகனையோ பிரிந்திருப்பது கஷ்டமாகவே பட்டது. ஜெகன் முறைப்படி தருமலிங்கத்தின் மனைவியிடம் "அன்ரி, நான் யமுனாவைக் கல்யாணம் கட்டலாம் என்று நினைக்கிறன். அவவுக்கும் விருப்பம், நீங்க சம்மதிச்சு அடுத்த முகூர்த்தமே நிச்சயதார்த்தம் பண்ணலாம் என்றான். தருமரின் மனைவி கனவு காண்பதாகவே நினைத்தாள். எனினும், "தம்பி நீர் நல்ல பிள்ளை. எனக்குத் தெரியும். உம்மை மருமகனா அடைய நான் தவம்தான் செய்ய வேணும். ஆனால் நீர் பெரிய இடத்துப் பிள்ளை. நாங்களோ ஏழைகள் ..." என கூறி முடிக்குமுன் குறுக்கிட்ட ஜெகன் "அன்ரி— இந்த உயர்வு தாழ்வை அண்டைக்கு மாஸ்டர் பார்த்தா நான் இப்பிடி வந்திருக்கேலாது. என்ரை சகோதரங்களும் நானும் பணக்காரராக இருக்கிறது மாஸ்டர் போட்ட பிச்சையாலைதான். நானும் குடிசையில் பிறந்து வளர்ந்தவன் தான்" என்றான். அவளால் எதிர்வாதம் செய்ய முடியவில்லை.

ஜெகன், யமுனாவின் காதல் தீபம், இல்லற தீபமாக ஒளி வீசியது. இருவரின் இரண்டு வருட இன்ப வாழ்வில் விளைந்த முத்தே சுஜன். கடந்த கால நினைவில் மூழ்கியிருந்த யமுனாவின் நினைவைக் கலைத்தது. கருணைக் கரத்தின் தழுவல். அது வேறு யாருமல்ல. ஜெகன் தன் மார்புடன் சுஜனை அணைத்தவாறு அவன் மறு கரத்தால் அவளின் கன்னத்தில் கிள்ளி விட்டான். ஒருவாறு தன்னை சுதாகரித்த யமுனா "என்னங்க இது குழந்தை மாதிரி" என்றாள். "யமுனா உன்னைப் பொறுத்த வரை இரண்டு குழந்தைகள் சுஜன், ஜெகன்' என்றான். அவள் மெய்ம்மறந்து சிரித்தாள். அவள் மனதில் இமயமென அவனும் உலகின் கண்களில் தருமு மாஸ்டரும் உயர்ந்து நின்றனர்.

# தொழில்வளம் காண....!



வட மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கான உற்பத்தி முகாமையாளர் நியமனத்திற்கான பயிற்சி நெறியை இலங்கை பனை அபிவிருத்திச் சபை அண்மையில் நடாத்தியது.

இப் பயிற்சி நெறியை அங்குரார்ப்பணம் செய்தபோது யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் கே. பாலகிருஷ்ணன் உரையாற்றுவதையும், அருகில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா அமர்ந்திருப்பதை முதல் படத்திலும், உற்பத்தி முகாமையாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுப் பயிற்சி பெறுபவர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். இப்பயிற்சி நெறி பிரதேச பொருளாதார அபிவிருத்தி உற்பத்தித்துறை முன்னேற்றத்திற்குப் பெரிதும் பயனளிப்பதாக அமைந்தது.



## அபிவிருத்தித் திட்டம் - 1987

2ம் பக்கத் தொடர்ச்சி

பட்ட விலைகளில் கள் விற்பனவு செய்தார்கள். ஒரு இடத்துத் தொழிலாளியின் ஊதியத்தை நினைத்து மற்றோர் இடத்துத் தொழிலாளி தமக்குள் விரக்தியடைந்து குமைந்து கொண்டு அவர் சார்ந்த சங்கத்திற்கும் விசுவாசமின்றி உழன்றார். இனி அவ்வாறு ஒருவர் மற்றோர் இடத்துத் தொழிலாளியின் வருவாயை நினைத்து ஏம்பலிக்கமாட்டார்.

அங்கத்துவ நண்பர்களே!

இன்று என்றுமில்லாதவாறு எம் முன்னே பிரமாண்டமான பிரச்சினையொன்று பூதாகாரம் கொண்டு எழுந்து வந்து நிற்கின்றது.

குடாநாடு தழுவிய இப்பூதாகாரப் பிரச்சினையில் உங்கள் மகத்தான பங்களிப்பு வெகுவாக எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது பனைமூலவளப் பிரயோசனங்கள் அரசின் எரிபொருள் தடையிலிருந்து, உணவுப் பிரச்சினை வரை தீர்க்கவல்லனவாகும்.

இதுவரை அதாவது கடந்த 15 ஆண்டுகளாக எமக்காக என்ற ஒரு குறுகிய வட்டத்தினுள் நின்று கள் உற்பத்தி விற்பனையில் மட்டும் கவனம் செலுத்திய நாம் இன்று பலர் ஒருவருக்காகவும் ஒருவர் பலருக்காகவும் என்ற உண்மையான கூட்டுறவுக் கோட்பாட்டுக்குள் நின்று செயல்படவேண்டிய வேளை வந்துள்ளது.

கள் அத்தியாவசியமான ஒன்றல்ல. இது இல்லாமல் மனிதரால் வாழமுடியும். ஆனால் உணவில்லாமல் யாரால் வாழமுடியும்?

இன்றைய அரச கெடுபிடிகளைப் பார்த்தால் உணவுப் பொருட்களைக் கூட தடை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி நிலைமை முற்று முழுதாக ஏற்படுத்தப்பட்டால் கள்ளையா குடித்துக் கொண்டிருக்க முடியும்? எமது குடாநாட்டு மக்கள் இப்போதே பட்டினிச் சாவுக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கொடுமைகளிலிருந்து குடாநாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டுமாயின் அது பனைத்தொழில் வல்லுநர்களாகிய உங்கள் கைகளிலேயே உள்ளதென்ற உண்மை வெள்ளிடை மலை.

எமது பனை மூலவளத்தைப் பயன்படுத்தி பட்டினிச்சாவிலிருந்து மக்களைக் காப்பாற்றும் மகோன்னத பொறுப்பு சங்கங்களையும் அங்கத்தவர்களையும் சார்ந்தது.

மற்றவர்க்கு உணவளித்து உயிர்கொடுப்பதனால் நீங்களும் உயர்வடைவீர்கள்.

# சங்கச் செய்திகள் - மாசி - 1987

## பனை விழாவின் போது 10 பேருக்கு வேட்டி சால்வை அன்பளிப்பு

தைப் பொங்கல் தினத்தன்று 'கற்பகவிழா' என்னும் பெயரில் பனைக்கு விழா வெடுத்துக் கொண்டாடிய நிகழ்வொன்று பருத்தித்துறையை அண்மியுள்ள வல்லிபுரக் கோவில் பகுதியில் இடம் பெற்றது.

இவ்விழாவிற்கு பருத்தித்துறை தெ.ப.பொ.கூ. சங்க பொது முகாமையாளர் திரு.என். கணேசமூர்த்தி தலைமை வகித்தார்.

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு.ச. வேலாயுதம்பிள்ளை அவர்கள் கூட்டுறவுக் கொடி ஏற்றி விழாவைத் தொடக்கி வைத்தார். சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் திரு. ஆ. ந. இராசேந்திரன், கூட்டுறவுப் புனருத்தாரணக் குழு சார்பில் திரு. அருள் மாஸ்றர் ஆகியோர் 87-ஆம் ஆண்டின் அபிவிருத்தி வேலைத்திட்டம் பற்றிய கருத்துரை வழங்கினர்.

இப்புதிய பனை விழாக் கொண்டாட்டத்தில் பெருந்தொகையான பொது மக்களும் கூட்டுறவாளர்களும் சங்கங்களின் தலைவர்கள் முகாமையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பனை ஒன்றுக்குப் பட்டுச் சாத்தி, பொங்கல் பொங்கி, பருத்தித்துறை சங்கத்தின் கிளைச் சங்கங்களின் வயதில் மூப்படைந்த 10 பனைத் தொழில் வல்லுநர்களுக்கு வேட்டி, சால்வையும் அன்பளிப்புச் செய்யப் பட்டது.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

வேலணை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக திரு. செ. அரசரத்தினம் மீண்டும் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

11—1—87ல் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. செ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வைத்து புதிய நிர்வாகசபை தெரிவு இடம் பெற்றது. திரு. செ. அரசரத்தினம் (தலைவர்), திரு. இ. அருள்நேசன் (உபதலைவர்), திரு. க. குணபாலசிங்கம் (செயலாளர்), ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்கள் விபரம்; திருவாளர்கள் ச.வேதநாயகம். க. ஐயாத்துரை, க. அப்பையா, வ. அருளானந்தம்.



தலைவர் அறிமுகம்

ஊர்காவற்றுறை தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கத்தலைவர்

# திரு. கு. மத்தியாஸ் அவர்கள்

ஊர்காவற்றுறை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கு. மத்தியாஸ் அவர்கள் 9 - ஆவது முறையாகவும் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தெ. ப. பொ. கூ. சங்கங்களின் வரலாற்றில் திரு. மத்தியாஸ் போன்று தொடர்ச்சியாக தலைவர் பதவியை வகித்தவர்கள் மிக அபூர்வம். அவர் அவ்வூர் பனைத்தொழில் வல்லுநர்களுக்கும் அச் சமூக மக்களுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவையினைப் புகழ்ந்து பாராட்டி எழுதியிருக்கிறார் யோன் பப்ரிஸ் தவமணி.

ஊர்காவற்றுறை தெ. ப. பொ. கூ. சங்கத்தில் தொடர்ந்து ஒன்பது ஆண்டு தலைவராகி, சாதனைகள் பல புரிந்த, சகலகலாவல்லவர் எம் தலைவர். சீவல் தொழிலாளிகளின் வாழ்க்கையில், புதிய பாதையைக் காட்டி, தன்னலமற்ற சேவையினால், சங்கத்தை வழி நடத்தி ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கிய தனிப்பெருந்தலைவர் எம் தலைவர்.

செயல்திறன், அன்பு, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சங்கத்தின் வளர்ச்சியை தன்னிரு கண்களாகவும், அங்கத்தவர் நலனை தனது மூச்சாகவும் கொண்டு செயலாற்றி, அங்கத்தவர்கள், ஊழியர்கள் உள்ளத்திலே, நீங்காத இடத்தைப் பெற்றுவிட்ட நிகரில்லாத் தலைவர் எம் தலைவர்.

ஊர் / தெ. ப. பொ. கூ. சங்கம் என்றால் மத்தியாஸ் என்றும் மத்தியாஸ் என்றால் தெ.ப.பொ. கூ. சங்கம் என்றும் சொல்லும் படியாக, தன் வாழ்க்கையையே சங்கத்தின் வளர்ச்சிக்காகச் சமர்ப்பணமாக அர்ப்பணித்து, தனி முத்திரையைப் பொறித்துக் கொண்ட எம் தலைவர் திரு. மத்தியாஸ் அவர்கள்.

**யோண் பப்ரிஸ் தவமணி**
ஊர்காவற்றுறை தெ.ப.பொ.கூ.ச

சாதிக்க முடியாது என்பதனை விடச், சாதிக்க முடியாதது எதுவுமில்லையென்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய சாதனை வீரர் எம் தலைவர். நினைத்த கருமத்தை துணிச்சலுடன் முன் வைத்து, எதிர்ப்பையும் எதிர் கொண்டு, எதிர்நீச்சல் போட்டு வெற்றி

( 31-ம் பக்கம் பார்க்க )

**மா. ஸ்ரீதரன் - சண்டிலிப்பாய்**




கே: கற்பகனே! உம்மை என் மருமகனுக்க விரும்புகின்றேன். என்ன சீதனம் எதிர்பார்க்கின்றீர்?

ப: "கற்பக"மாம் அற்புதக் காதற் கரும்பனையாள் இருக்கையில் சீதனம் எதற்கு மாமனாரே?

**கே. ஜெயம் - ஊர்காவற்றுறை**

கே: கற்பனைக்கும, கரும்பனைக்கும் உள்ள வேறுபாடுதான் என்னவோ?

ப: கற்பனையாம் அல்ல பெரும் காசுதரும் நற்பனையே கரும் பனை. கற்பனை மனதில் தோன்றி மறைந்துவிடும். கரும்பனை மண்ணில் தோன்றி மனித குலத்தை வாழ்விக்கும் சிரஞ்சீவியாக விளங்கும். கற்பனைக்கும் எட்டாத அற்புதங்களைப் படைப்பதுவும் கரும்பனையே'

**எஸ். சிவகுரு - அல்வாய் மேற்கு**

கே. ஆலும் வேலும் பல்லுக்குறுதி தெங்கும் — பனையும் எதற்கு உறுதி?

ப: உண்ட கடனுக்குழைக்கும் நல்ல தென்னை. கைம்மாறு வேண்டா(து) வாழ்வில் கடமையாற்றும் பனை. இந்த இரண்டும் எம் மாந்தர் நல்வாழ்விற்கு உறுதியாக விளங்குகின்றன.

**ஏ. என். எஸ். திருச்செல்வம் - புலோலி**

கே: மங்கள, துக்க வைபவங்களில் எல்லாம் [இப்போது அலங்கார வேலைகளுக்காகப் பனைகளைத் தறித்துச் சந்திகளில் நாட்டுகிறார்களே. அவர்களைப்பற்றி...!

ப. என்னென்று சொல்லுவது! தமது பிரதேச வளத்தின் ஒரு பகுதியை அவர்கள் அழித்து விடுகிறார்கள் என்பதை உணருகிறார்கள் இல்லையே.



**ஏ. கே. கந்தசாமி - பளை**

கே. பனை போன்றவர்கள் யாரெனக் கூற முடியுமா?

ப. "உத்தமர் தாம் ஈயுமிடத் தோங்கு பனை போல்வரென முத்தமிழ்த்தாய் சொன்ன முதுமொழி போல் -- இத்தரையில் நல்ல பனைத் தொழில் நாட்டினில் ஓங்க அதில் வல்லவர்கள் வாழ்க மகிழ்ந்து" — என்று திருமுருக கிருபானந்த வாரியார் சொல்லியுள்ளார்.

**கனகஞானி - அல்வாய் வடக்கு**

கே: கற்பகனாரே! ஈழத்தின் தேசிய பொருளாதாரத்தை நிர்ணயிக்கின்ற காரணிகளில் பனைவளப் பொருளாதாரமும்...?

ப: நிச்சயம் இடம் பெறும் ஞானியாரே.

## கேள்வி—பதில்

நேயர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பயனுள்ள பதில்கள் 'கற்பக'னால் சுவையாகத் தரப்பட்டுவருகின்றது. உங்கள் கேள்விகளை ஆசிரியர், கற்பகம், 330, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு உடன் அனுப்பி வையுங்கள். தரமான கேள்விக்குப் பரிசும் காத்திருக்கிறது.

(ஆ - ர்)

**திரு. கு. மத்தியாஸ்**

29ஆம் பக்கத தொடர்ச்சி

கொண்ட செயல் வேங்கை எம் தலைவர். ஏழைகளின் ஏக்கங்களை எட்டாத கனவுகளை ஏற்று, அவர்கள் எதிர்பார்ப்பு நனவாக, ஏணியாக நின்று எதிர்காலம் அமைத்த ஏழைகளின் தோழன் எம் தலைவர்.

அங்கத்தவரின் சுபீட்ச வாழ்வுக்காக முன்னேற்றமான திட்டங்களை வகுத்து, அதை நடைமுறைப் படுத்த போ.அ. நிலையம், லோவைன் நிலையம் அமைத்து, தொழிலாளர் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பை அளித்து சமூக அமைப்பிலே மறு மலர்ச்சியை மலர வைத்த, எம் தலைவர், அங்கத்தவர்களின் வருங்கால வாரிசுகள் வளமுடன் கல்வி கற்க ஆரம்பப் பாடசாலையை அமைத்து, போதனாசிரியரையும் நியமித்து அறிவுக் கண்ணைத் திறப்பித்த அறிவுக் களஞ்சியம் எம் தலைவர்.

சமூகத்தவரின் நெஞ்சத்தில் பெருமதிப்பைப் பெற்றிருக்கும் எம் தலைவரை எண்ணி, புளகாங்கிதம் அடைகின்றோம். சரித்திரம் படைத்த தலைவரின் சேவைகள் பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டியவை.

எம் தலைவர் திரு. மத்தியாஸ் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து சங்கத்திற்கும் அங்கத்தவர்களுக்கும் அவ்வூர் ஏழை எளிய மக்களுக்கும் அரும் பணி புரிய வேண்டுமென வாழ்த்துவோம்.

" நலிந்தோருக்கு உதவுங்கள் "

கல்வியையும் பண்பாட்டையும் கற்றுக்கொடுத்து தாழ்ந்த வகுப்பாரை உறக்கத்திலிருந்து விழித்தெழ உதவுங்கள். விழிப்படையும் நாள் அவர்களுக்கு கட்டாயம் வரும். அவ்வாறு விழிப்படையும்போது, நீங்கள் செய்த உதவியை நன்றியுடன் நினைவு கூர்ந்து உங்களைப் போற்றுவார்கள்.

—சுவாமி விவேகானந்தர்



உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்.
உள்ளூர்த் தயாரிப்புகளுக்கு ஆதரவு கொடுப்போம்.

10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 மில்க்வைற் பார்சோப் அல்லது
2 சுப்ப மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி விவசாய மலர் மில்க்வைற் செய்தி - 135 ஐப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆரோக்கிய வாழ்வுக்கு பனம் பண்டங்களை உபயோகியுங்கள்.

**மில்க்வைற் தொழிலகம்** யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23233

## மணப்பந்தல்

**சந்திரராசா --- சந்திரவதனா**

மானிப்பாய் பரிஷ் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் திருநிறை செல்வன் சந்திரராசாவுக்கும் பொற்பதி வீதி கோண்டாவிலைச் சேர்ந்த திருநிறை செல்வி சந்திரவதனாவுக்கும் 7-2-87 சனிக்கிழமை அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பிரபல கூட்டுறவாளர்கள், நண்பர்கள், உற்றார் உறவினர்கள் சுற்றம் சூழவந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள். "வாழ்க மணமக்கள்"






பனை அபிவிருத்திச் சபை

கிண்ணம் பப்ளிகேஷன், யாழ்ப்பாணம்